முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

## AA1 பரீட்சை – 2020 சனவரி

# (AA12) வியாபாரத்திற்கான கணியவியல் முறைகள்

(Quantitative Methods for Business)

2020-01-26
முற்பகல்
[8.45 – 12.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 06

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள் (கவனமாக வாசிக்கவும்):**

(1) ***அனுமதிக்கப்பட்ட நேரம் :*** *வாசிப்பதற்காக - 15 நிமிடங்கள்*
*விடை எழுதுவதற்காக - 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *உமக்குத் தரப்பட்ட* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் விண்ணப்பித்த அதே* ***ஒரு மொழியிலேயே*** *விடையளித்தல் வேண்டும்.*

(4) *சகல செய்முறைகளையும் கணிப்புகளையும் சமர்ப்பிக்கவும். நீங்கள் மேற்கொண்ட எடுகோள்கள் ஏதாவது இருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) *நிரற்படுத்தப்படாத கணிப்பான்களின் பாவனை* ***மட்டும்*** *அனுமதிக்கப்பட்டுள்ளது.*

(6) ***வரைபுத்தாள் மற்றும் கணித அட்டவணைகள்*** *வழங்கப்படும்.*

(7) *வரைவிலக்கணங்களுடன்கூடிய* ***செயல் வினைச்சொல் பட்டியல்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவிலும் ஒரு* ***வினைச் சொல்*** *உள்ளடங்கியிருக்கிறது. (OTQ's தவிர்ந்த). பரீட்சார்த்திகள் செயல் வினைச்சொல் பட்டியலில் தரப்பட்ட வினைச்சொல்* ***வரைவிலக்கணத்தின்*** *அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(8) ***சூத்திரங்களைக் கொண்ட தாள்கள்*** *இணைக்கப்பட்டுள்ளன.*

(9) *100 புள்ளிகள்.*

---

## பகுதி A

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

பதினைந்து(15) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

**வினா 01**

*இல.* ***1.1*** *இலிருந்து* ***1.10*** *வரையிலான வினாக்களுக்கு மிகச் சரியான விடையினைத் தெரிவு செய்க. தெரிவு செய்த விடையின் இலக்கத்தினை உமது விடைப்புத்தகத்தில் வினாவுக்குரிய இலக்கத்துடன் எழுதுக.*

**1.1** $3x + 3 = 2(x + 2)$ எனின், $x$ இன் பெறுமானம்:

(1) 5 (2) 1 (3) -1 (4) 3

(03 புள்ளிகள்)

**1.2** **விஜயன்** என்பவர் வங்கியொன்றிலே 8 % வருடாந்த எளிய வட்டிக்கு ரூபா 25,000/- இனை முதலீடு செய்கிறார். 5 வருடங்களின் இறுதியில் முதலீட்டின் மீதான மொத்த வட்டித் தொகையானது:

(1) ரூபா 10,000/-. (2) ரூபா 35,000/-. (3) ரூபா 2,000/-. (4) ரூபா 11,730/-.

(03 புள்ளிகள்)

**1.3** கம்பனியொன்றின் மொத்த வருமானச் சார்பு [Total Revenue (TR)] ஆனது $\mathrm{TR} = 33\mathrm{q} - 4\mathrm{q}^2$ இனால் தரப்படும் எனின், கம்பனியின் எல்லை வருமானச் சார்பு [Marginal Revenue (MR)] தரப்படுவது:

(1) MR = 33 - 4q (2) $\mathrm{MR} = 33\mathrm{q} - 4\mathrm{q}$

(3) MR = 33q - 8q (4) MR = 33 - 8q (03 புள்ளிகள்)

**1.4** கம்பனியொன்று 2018 ஆம் ஆண்டிலே 6,000 kg சீனியை உற்பத்தி செய்ததுடன் 2019 ஆம் ஆண்டில் 9,500 kg சீனியை உற்பத்தி செய்தது. 2018 ஆம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு 2019 ஆண்டிற்கான கணியச் சார்பானது (quantity relative) *(கிட்டிய முழு எண்களில்)*:

(1) 63 % (2) 100 % (3) 158 % (4) 58 %

(03 புள்ளிகள்)

**1.5** **வரையறுக்கப்பட்ட A கம்பனியானது** ரூபா 5,000,000/- இனை ஆரம்ப முதலீடாகக் கொண்ட புதிய செயற்றிட்டமொன்றை மதிப்பிட எண்ணியது. இச்செயற்றிட்டம் அடுத்த 3 ஆண்டுகளுக்கு ஒவ்வொன்றும் ரூபா 2,500,000/- பெறுமதியான வருடாந்த நிகர காசு உட்பாய்வை உருவாக்குகிறது. கம்பனியினது மூலதனக் கிரயம் (கழிவுக் காரணி) 10 % ஆக இருப்பின், செயற்றிட்டத்தின் நிகர இற்றைப் பெறுமதி [(Net Present Value (NPV)]:

(1) ரூ. 2,500,000/-. (2) ரூ. 1,215,000/-. (3) ரூ. 4,000,000/-. (4) ரூ. 2,458,000/-.

(03 புள்ளிகள்)

**1.6** **P, Q, R, S** என்ற நான்கு பொருட்களின் 2017 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான விலைகள் பின்வருமாறு:

| **பொருட்கள்** | **பொருள் ஒன்றிற்கான விலை** | |
|---|---|---|
| | **2017 (ரூ.)** | **2019 (ரூ.)** |
| **P** | 220 | 260 |
| **Q** | 320 | 360 |
| **R** | 420 | 450 |
| **S** | 280 | 300 |

மேற்படி தரவுகளின் அடிப்படையில், 2017 ஆம் ஆண்டினை அடியாண்டாகக் கொண்டு, 2019 ஆம் ஆண்டிற்கான எளிய திரள் விலைச் சுட்டெண் (simple aggregate price index) ஆனது *(கிட்டிய முழு எண்களில்)*:

(1) 110 % (2) 91 % (3) 100 % (4) 80 %

(03 புள்ளிகள்)

**1.7** ஒரு நாட்டினது கடந்த 6 ஆண்டுகளுக்கான சக்தி நுகர்வு பற்றிச் சேகரிக்கப்பட்ட தரவுகள் வருமாறு:

| **ஆண்டு (X)** | **சக்தி நுகர்வு (E) (மெகாவாற்றுக்களில்)** |
|---|---|
| 2013 | 213 |
| 2014 | 217 |
| 2015 | 218 |
| 2016 | 223 |
| 2017 | 226 |
| 2018 | 227 |

சராசரிச் சக்தி நுகர்வுக்கான போக்குச் சமன்பாடானது (trend equation) $\mathrm{T} = 210 + 3x$.

2019 ஆம் ஆண்டிற்காக எதிர்பார்க்கப்படும் சக்தி நுகர்வானது *(மெகாவாற்றுக்களில்)*:

(1) 210 (2) 228 (3) 231 (4) 189

(03 புள்ளிகள்)

**1.8** கீழே தரப்பட்ட வென்வரிப்படமானது (Venn diagram) **M** மற்றும் **Y** என்ற இரு நிகழ்வுகளுக்கான நிகழ்தகவைக் காட்டுகிறது:




மேற்படி வென்வரிப்படத்திற்கேற்ப $P(M \cup Y)$ ஆனது:

(1) 0.12 (2) 0.44 (3) 0.23 (4) 0.56

(03 புள்ளிகள்)

**1.9** கம்பனி ஒன்றினது கடந்தகால விற்பனைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட நிகழ்தகவுப் பரம்பலைக் கீழேயுள்ள அட்டவணை காட்டுகிறது:

| **விற்பனைகள் (x) (ரூ. '000)** | 1,000 | 1,100 | 1,250 | 1,320 | 1,400 |
|---|---|---|---|---|---|
| **நிகழ்தகவு** | 0.15 | 0.20 | 0.30 | 0.25 | 0.10 |

கம்பனியினது விற்பனையின் எதிர்வுப் பெறுமானமானது (Expected value):

(1) ரூபா 1,075/-. (2) ரூபா 1,215/- (3) ரூபா 1,125/- (4) ரூபா 1,225/-

(03 புள்ளிகள்)

**1.10** நபர் ஒருவர் ரூபா 200,000/- இனை 12 % வருடாந்தக் கூட்டு வட்டி வீதத்தில் கடனாகப் பெற்றுள்ளார். 03 வருடங்களின் இறுதியில் கடனை முழுமையாகத் தீர்ப்பதற்காக அவர் செலுத்த வேண்டிய மொத்தப் பணத் தொகை:

(1) ரூபா 250,880/-. (2) ரூபா 298,560/-. (3) ரூபா 280,986/-. (4) ரூபா 272,000/-.

(03 புள்ளிகள்)

***1.11** தொடக்கம் **1.13** வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை உங்களது விடைப்புத்தகத்திலே உரிய வினா இலக்கத்திற்கு எதிரே எழுதுக.*

**1.11** **வரையறுக்கப்பட்ட X கம்பனியானது** கணினிகளைக் கொள்வனவு செய்து விற்பனை செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இக்கம்பனி வாடிக்கையாளர் ஒருவருக்கு ரூபா 145,000/- விலையில் கணினி ஒன்றினை விற்பனை செய்தது. இக்கம்பனியின் கொள்கையானது, கொள்வனவு விலையில் 25% இலாபம் வைத்து கணினிகளை விற்பனை செய்வதாக அமைந்திருந்தது.

அந்தக் கணினியின் கொள்வனவு விலையைக் கணிக்குக. (02 புள்ளிகள்)

**1.12** நபர் ஒருவர் ரூபா 500,000/- பணத்தினை முதலீடு செய்துள்ளார். அந்த முதலீட்டில் ஒரு பகுதியை வருடாந்தம் 6 % எளிய வட்டி வீதத்தில் முதலீடு செய்ததுடன் எஞ்சிய பகுதியை வருடாந்தம் 8 % எளிய வட்டி வீதத்தில் முதலீடு செய்துள்ளார். முதலீட்டின் மூலம் வருடாந்த வட்டி வருமானமாக ரூபா 38,000/- இனை அவர் பெற்றுக் கொண்டார்.

8 % வருடாந்த எளிய வட்டிக்கு முதலீடு செய்த பணத் தொகையைக் கணிக்குக. (02 புள்ளிகள்)

**1.13** மாதிரியெடுத்தல் (sampling) பயன்படுத்தப்படுவதற்கான இரு (02) காரணங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள்)

*கீழே தரப்பட்டுள்ள ஒவ்வொரு கூற்றும் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடுக. உமது விடையை உரிய வினா இலக்கத்துடன் விடைப்புத்தகத்திலே (**சரியானது / தவறானது**) எனக் குறிப்பிடுக.*

**1.14** இரு மாறிகளுக்கிடையிலான இணைபுக் குணகம் -1 ஆகக் காணப்படும்போது அவற்றுக்கிடையே நலிவான எதிர்த் தொடர்பு காணப்படும். (02 புள்ளிகள்)

**1.15** இலாப – நட்டமற்ற புள்ளியில் (break-even point) மொத்த வருமானமானது மொத்தக் கிரயத்திற்குச் சமனாகக் காணப்படும். (02 புள்ளிகள்)

(மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

நான்கு (04) கட்டாய வினாக்கள்

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

(a) **மகேஷ்** என்பவர் வங்கியொன்றின் விசேட சேமிப்புக் கணக்கிலே ரூபா 750,000/- இனை காலாண்டிற்குக் கூட்டப்படுகின்ற 12 % வருடாந்தக் கூட்டு வட்டி வீதத்தில் முதலீடு செய்கிறார்.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

2 வருட இறுதியில் அவரது கணக்கிலுள்ள பின்வருவனவற்றைக் **கணிக்குக**:

(i) அவரது கணக்கில் உள்ள மொத்தத் தொகை (04 புள்ளிகள்)

(ii) ஈட்டப்பட்ட மொத்த வட்டி (02 புள்ளிகள்)

(b) **சந்திரன்** என்பவர் ரூபா 500,000/- இனை வருடாந்தம் கூட்டப்படுகின்ற 14 % வருடாந்த கூட்டு வட்டி வீதத்தில் கடனாகப் பெற்றுள்ளார். இந்தக் கடனானது 5 சமமான தவணைக் கட்டணங்களாக ஒவ்வொரு வருட இறுதியிலும் மீளச் செலுத்தப்பட வேண்டும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

கடனுக்காக வருடாந்தம் செலுத்தப்பட வேண்டிய தவணைக் கட்டணத்தைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

(a) **வரையறுக்கப்பட்ட அபா கம்பனியின்** கணக்காளர் புதிதாக விருத்தி செய்யப்பட்ட பொருளொன்று தொடர்பில் மொத்த வருமானச் சார்பு (TR) மற்றும் மொத்தக் கிரயச் சார்பு (TC) ஆகியவற்றைப் பின்வருமாறு இனங்கண்டார்:

$$TR = 74x + 2x^2$$

$$TC = 3x^2 - 86x + 250$$

இங்கு $x$ என்பது அலகுகளின் எண்ணிக்கை ஆகும்.

**நீங்கள் செய்யவேண்டியது:**

இலாபம் உச்சமடையும்போதான அலகுகளின் எண்ணிக்கையைக் **கணிக்குக.** (04 புள்ளிகள்)

(b) கம்பனியொன்று **B** எனும் பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்கிறது. அதன் மாறும் கிரயம் அலகொன்றிற்கு ரூபா 75/- ஆகவும் நிலையான கிரயம் ரூபா 250,125/- ஆகவும் இருக்கிறது. மொத்த வருமானச் சார்பு (TR) ஆனது $650x$ ஆகும். (இங்கு $x$ என்பது உற்பத்தி செய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை ஆகும்).

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(i) மொத்த கிரயச் (TC) சார்பையும் இலாபச் சார்பையும் **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(ii) இலாப – நட்டமற்ற கணியத்தை (break – even quantity) **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**வரையறுக்கப்பட்ட சஞ்ஜய் கம்பனியின்** 50 ஊழியர்களது மாதாந்தச் சம்பளம் தொடர்பான தகவல்கள் கீழேயுள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன:

| **மாதாந்தச் சம்பளம் (ரூ.'000)** | 10 -19 | 20 - 29 | 30 - 39 | 40 - 49 | 50 - 59 | 60 - 69 |
|---|---|---|---|---|---|---|
| **ஊழியர்களின் எண்ணிக்கை** | 6 | 20 | 8 | 6 | 6 | 4 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

மாதாந்தச் சம்பளத்தின் கீழ்வருவனவற்றைக் **கணிக்குக**:

(a) இடை (mean) (03 புள்ளிகள்)

(b) நியம விலகல் (Standard deviation) (04 புள்ளிகள்)

(c) மாறல் குணகம் (Coefficient of variation) (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

வாகன உற்பத்தி நிறுவனம் ஒன்றின் 6 மாதங்களில் உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் மொத்த உற்பத்திச் செலவு என்பவற்றைக் கீழே தரப்பட்ட அட்டவணை காட்டுகிறது:

| **உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை ($x$)** | 42 | 51 | 32 | 60 | 48 | 72 |
|---|---|---|---|---|---|---|
| **மொத்த உற்பத்திச் செலவு ($y$) (மில்லியன் ரூபாய்களில்)** | 56 | 68 | 43 | 76 | 66 | 94 |

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) வரைபுத்தாள் ஒன்றில் மேற்படி தரவுகளைப் பயன்படுத்தி சிதறல் புள்ளி வரைபொன்றை **வரைக.** (03 புள்ளிகள்)

(b) மேற்படி இரு மாறிகளுக்குமிடையிலான எளிய தொடர்பைக் காட்டும் $y$ = a + b$x$ எனும் வடிவிலான இழிவு வர்க்க முறை சமன்பாட்டினை **இனங்காண்க.** (05 புள்ளிகள்)

(c) உற்பத்தி செய்யப்பட்ட வாகனங்களின் எண்ணிக்கை 55 ஆகக் காணப்படும்போது எதிர்பார்க்கப்படும் உற்பத்திச் செலவைக் **கணிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

# <u>பகுதி C</u>

ஒரு (01) கட்டாய வினா

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

(A) பின்வரும் ஒருங்கமைச் சமன்பாடுகள் தரப்பட்டுள்ளன:

$$3x + 5y = 36$$

$$2x + 6y = 32$$

**நீங்கள் செய்யவேண்டியது:**

$x$, $y$ ஆகியவற்றின் பெறுமானங்களைக் **கணிக்குக.** (03 புள்ளிகள்)

(B) கீழே தரப்பட்டுள்ள அட்டவணையானது பொருள் **A** யின் விற்பனையுடன் தொடர்புடைய காலாண்டு விற்பனைகள், 4 – காலாண்டு நகரும் சராசரி (4-quarter moving average) மற்றும் மையப்படுத்திய நகரும் சராசரிப் (centered moving average) பெறுமானங்கள் என்பவற்றைக் காட்டுகிறது. இது சுழற்சி மாற்றமும் (cyclical) எழுமாற்று (random) மாறிகளும் அற்ற பெருக்கல் மாதிரி (multiplicative model) எனக் கருதுக. [R = 1, C = 1]:

| ஆண்டு | காலாண்டு | t | Y | 4 காலாண்டு நகரும் சராசரி | மையப்படுத்தப்பட்ட நகரும் சராசரி (T) | Y/T |
|---|---|---|---|---|---|---|
| 2017 | 1 | 1 | 300 | | | |
| | | | | | | |
| | 2 | 2 | 225 | | | |
| | | | | 262.5 | | |
| | 3 | 3 | 275 | | _ _ **(d)** _ _ | 1.02 |
| | | | | _ _ **(a)** _ _ | | |
| | 4 | 4 | 250 | | 278.125 | _ _ **(f)** _ _ |
| | | | | 281.25 | | |
| 2018 | 1 | 5 | 350 | | 284.375 | 1.23 |
| | | | | 287.5 | | |
| | 2 | 6 | 250 | | 290.625 | 0.86 |
| | | | | _ _ **(b)** _ _ | | |
| | 3 | 7 | 300 | | _ _ **(e)** _ _ | 1.00 |
| | | | | 306.25 | | |
| | 4 | 8 | 275 | | 309.375 | 0.89 |
| | | | | 312.5 | | |
| 2019 | 1 | 9 | 400 | | 318.75 | 1.255 |
| | | | | _ _ **(c)** _ _ | | |
| | 2 | 10 | 275 | | 328.125 | _ _ **(g)** _ _ |
| | | | | 331.25 | | |
| | 3 | 11 | 350 | | | |
| | | | | | | |
| | 4 | 12 | 300 | | | |

**நீங்கள் செய்யவேண்டியது:**

மேற்படி அட்டவணையிலுள்ள **(a)** தொடக்கம் **(g)** வரையுள்ள பெறுமானங்களைக் **கணிக்குக.**

(07 புள்ளிகள்)

(C) பை ஒன்றில் ஒரே அளவுடைய 5 சிவப்பு மாபிள்களும் 3 கறுப்பு மாபிள்களும் உள்ளன. ஒவ்வொரு எடுப்பின்போதும் ஒரு மாபிள் எழுமாறாக பையிலிருந்து எடுக்கப்பட்டு மீளவும் பையினுள் இடப்படுகின்றது.

**நீங்கள் செய்யவேண்டியவை:**

(a) ஒன்றன்பின் ஒன்றாக இரு மாபிள்கள் பையிலிருந்து எடுக்கப்படும்போதான பேறுகளைக் காட்டும் மர வரிப்படத்தை **வரைக.** (04 புள்ளிகள்)

(b) பின்வருவனவற்றுக்கான நிகழ்தகவுகளைக் **கணிக்குக.**

(i) எடுக்கப்பட்ட இரு மாபிள்களும் ஒரே நிறமுடையதாக இருத்தல் (02 புள்ளிகள்)

(ii) ஆகக் குறைந்தது ஒரு சிவப்பு மாபிள் இருத்தல் (02 புள்ளிகள்)

(iii) ஆகக் குறைந்தது ஒரு கறுப்பு மாபிள் இருத்தல் (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

*பகுதி C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |

# சூத்திரங்கள்

## கணித அடிப்படைக் கோட்பாடுகள்:

இருபடிச் சமன்பாடு:

$ax^2 + bx + c = 0$ எனும் இருபடிச் சமன்பாட்டின் தீர்வுகள் பின்வருமாறு தரப்படும்

$$x = \frac{-b \pm \sqrt{b^2 - 4ac}}{2a}$$

கூட்டல் விருத்தி:

முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகை :

$$S = \frac{n}{2}\{ 2a + (n-1)d\}$$

பெருக்கல் விருத்தி:

முதல் n உறுப்புகளின் கூட்டுத்தொகை:

$S = a\,\frac{\{r^n - 1\}}{\{r - 1\}}$ $r > 1$ ஆகும்போது

$S = a\,\frac{\{1 - r^n\}}{\{1 - r\}}$ $r < 1$ ஆகும்போது

$S = na$ $r = 1$ ஆகும்போது

## நிதிக் கணியம் :

எளிய வட்டி:

$S = X\,(1 + nr)$

கூட்டு வட்டி:

$S = X\,\{1 + r\}^n$

கழிவு:

இற்றைப் பெறுமதி =

எதிர்காலப் பெறுமதி $\times \frac{1}{(1+r)^n}$

ஈட்டின் மீள்கொடுப்பனவு :

$$A = \frac{SR^n(R-1)}{\{R^n - 1\}}$$

உட்திரும்பல் வீதம் :

$$IRR = \frac{[N_1 r_2 - N_2 r_1]}{[N_1 - N_2]}\,\%$$

Or

$$IRR = a\% + \frac{NPV_A}{[NPV_A - NPV_B]}\,(b - a)\%$$

## எண்சார் விளக்க அளவிடைகள்:

இடை $\bar{x}$ :

கூட்டமாக்கப்படாத தரவு: $\frac{\sum x}{n}$

கூட்டமாக்கப்பட்ட தரவு : $\frac{\sum fx}{\sum f}$

நியம விலகல் $\sigma$:

கூட்டமாக்கப்படாத தரவு :

$$\sqrt{\frac{\sum (x - \bar{x})^2}{n}} \quad \text{or} \quad \sqrt{\frac{\sum x^2}{n} - \bar{x}^2}$$

கூட்டமாக்கப்பட்ட தரவு :

$$\sqrt{\frac{\sum f(x - \bar{x})^2}{\sum f}} \quad \text{or} \quad \sqrt{\frac{\sum fx^2}{\sum f} - \bar{x}^2}$$

மாறல் குணகம் (CV):

$$\frac{\text{நியம விலகல்}}{\text{இடை}} = \frac{\sigma}{\bar{x}} \times 100$$

## இரு மாறும் கணியங்களின் ஒப்பீடு :

பியர்சனின் பெருக்கல் திருப்ப இணைபுக் குணகம்

இணைபுக் குணகம் (r):

$$\frac{[n\sum xy - \sum x \sum y]}{\sqrt{\{[n\sum x^2 - (\sum x)^2] \times [n\sum y^2 - (\sum y)^2]\}}}$$

பிற்செலவுக் குணகம் (a, b):

$$b = \frac{[n\sum xy - \sum x \sum y]}{[n\sum x^2 - (\sum x)^2]}$$

$$a = \bar{y} - b\bar{x}$$

**பொருளாதார மாறிகளுடனான மேலதிக நேர ஒப்பீடு**

சுட்டெண்கள் :

விலைச் சார்பு $= \frac{p_1}{p_0} \times 100$

கணியச் சார்பு $= \frac{q_1}{q_0} \times 100$

பெறுமானச் சார்பு $= \frac{v_1}{v_0} \times 100$

எளிய திரள் விலைச் சுட்டி $= \frac{\sum p_1}{\sum p_0} \times 100$

எளிய திரள் கணியச் சுட்டி $= \frac{\sum q_1}{\sum q_0} \times 100$

சராசரி விலைச் சார்பு $= \frac{1}{n} \sum \frac{p_1}{p_0} \times 100$

சராசரி கணியச் சார்பு $= \frac{1}{n} \sum \frac{q_1}{q_0} \times 100$

நிறையேற்றப்பட்ட திரள் மொத்தங்கள்

1) அடிப்படை நிறையேற்றப்பட்ட/ இலாஸ்பெயாரின்:

விலைச் சுட்டி $= \frac{\sum p_1 q_0}{\sum p_0 q_0} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1 p_0}{\sum q_0 p_0} \times 100$

2) தற்போதைய நிறையேற்றப்பட்ட/ பாசேயின்:

விலைச் சுட்டி $= \frac{\sum p_1 q_1}{\sum p_0 q_1} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1 p_1}{\sum q_0 p_1} \times 100$

3) நியம நிறையைப் பயன்படுத்தல்

விலைச் சுட்டி $= \frac{\sum p_1 w}{\sum p_0 w} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum q_1 w}{\sum q_0 w} \times 100$

சார்புகளின் நிறையேற்றப்பட்ட சராசரி

விலைச் சுட்டி $= \frac{\sum [w \times I_p]}{\sum w} \times 100$

கணியச் சுட்டி $= \frac{\sum [w \times I_q]}{\sum w} \times 100$

காலத் தொடர்:

கூட்டல் மாதிரி

Y = T + S + C + R

பெருக்கல் மாதிரி

Y = T X S X C X R

**தொடையும் நிகழ்தகவும்**

∪ - ஒன்றிப்பு; A∪B என்பது A யில் உள்ள எல்லா மூலகங்களையும் B யில் உள்ள எல்லா மூலகங்களையும் குறிப்பிடுவதுடன் எந்த மூலகங்களும் இரு முறை வராது.

∩ - இடைவெட்டு; A∩B என்பது A, B என்ற இரு தொடைகளிலும் உள்ள மூலகங்களைக் குறிக்கும்.

P (A) – A எனும் நிகழ்வுக்கான நிகழ்தகவு

P (A/B) – B எனும் நிகழ்வு தரப்படும்போது A எனும் நிகழ்வுக்கான நிகழ்தகவு

பொது விதிகள்:

P (A∪B) = P (A) + P (B) – P (A∩B)

$$P(A/B) = \frac{P(A\cap B)}{P(B)}$$

எதிர்வுப் பெறுமானமும் மாறல் திறனும்:

$$E(X) = \sum(probability \times pay\ off) = \sum p \times x$$

$$VAR(X) = \sum px^2 - \left(\sum px\right)^2$$

செவ்வன் பரம்பல்:

$$Z = \frac{x - \mu}{\sigma}$$